IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | 05/2021 |
| | | D/W's | : | 1 |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | Sankar | CASTE | : | |
| S/O. / W/O. | Karuppanakonar | RELIGION | : | |
| VILLAGE | | CALLING | : | |
| TALUK | | AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of **15-12-2022**

குறுக்கு விசாரணை (பி.வா.சா.1 ஆஜர்.) சத்தியப்பிரமானம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது.

**<u>குறுக்கு விசாரணை (வாதி தரப்பில்) :</u> 15-12-2022**

வாதிகள் எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சொத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். வழக்கு சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் பட்டா எண்.643, சர்வே எண்.715/5க்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். சாட்சியிடம் பிரமான வாக்குமூலத்தை காட்டி அதில் உள்ள கையொப்பம் உங்களுடையதா என்று கேட்கப்பட்டது, சாட்சி ஆவணத்தை பார்வையிட்டு என்னுடையது தான் என்று சாட்சியம் அளித்தார். உங்களால் தாக்கல் செய்யப்பட்ட பிரமான வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை வழக்கறிஞரிடம் யார் சொன்னார்கள் என்றால் நான் தான் சொன்னேன். உங்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமான வாக்குமூலத்தில் அடிக்கப்பட்டு கையால் எழுதப்பட்டுள்ளது குறித்து உங்களுக்கு தெரியுமா என்றால் சாட்சி ஆவணத்தை பார்வையிட்டு தெரியாது என்று சாட்சியம் அளித்தார். நீங்களும் வாதிகளும் கீழமட்டையான் கிராமத்தை சேர்ந்த ஒரே ஊர்க்காரர்கள் என்றால் ஆம்.

கீழமட்டையான் கிராமம், சர்வே எண்.717/5ல் செண்டு 21க்கு தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதிகளின் தகப்பனார் முத்தையா அவர்களை உங்களுக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியும். வாதிகளின் தகப்பனார் முத்தையா என்பவர் கடந்த 27.03.1972ம் தேதியில் தாவா சொத்தை கீழமட்டையான் கிராமத்தை சேர்ந்த வீரண மூப்பனார், சிந்தாமணி, கருப்பண மூப்பர், வீரணன் ஆகியோர்களிடம் இருந்து சோழவந்தான் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.398/1972ன்படி பதிவு செய்யப்பட்ட கிரையம் பெற்றுள்ள விபரம் பற்றி உங்களுக்கு தெரியுமா என்றால் யாரிடம் இருந்து வாங்கினார் என்ற விபரம் எனக்கு தெரியாது, எனது தகப்பனார் கிரையம் வாங்கினார். தாவா

சொத்தை வாதிகளின் தகப்பனார் முத்தையா கிரையம் பெற்ற நாள் முதல் இறக்கும் வரை அனுபவம் செய்து வந்தார் என்று சொன்னால் அது தவறு, நானும் எனது தகப்பனாரும் தான் அனுபவம் செய்து வருகிறோம்.

தாவா சொத்து கிணறு இருக்கிறதா என்றால் உள்ளது, அதில் தான் நான் விவசாயம் செய்து சாகுபடி செய்து அனுபவம் செய்து வருகிறார். வாதியின் தகப்பனார் தாவா சொத்தை கிரையம் பெற்றதற்கு பின்னிட்டு வாதியின் தகப்பனாரால் சொந்த செலவில் வட்டக்கிணறு ஏற்படுத்தப்பட்டது என்று சொன்னால் எனக்கு தெரியாது. தாவா சொத்தில் வாதியின் தகப்பனாரால் விவசாயத்திற்காக மின் இணைப்பு பெறப்பட்டு அவரால் மின் கட்டணம் செலுத்தப்பட்டு வந்துள்ளார் என்றால் தவறு, நான் தான் மின் கட்டணம் செலுத்தி அனுபவம் செய்து வருகிறேன். மின் இணைப்பு பெறப்பட்டு அதன்மூலம் வாதியும் வாதியின் தகப்பனாரும் மின் மோட்டார் கொண்டு விவசாயம் செய்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்று சொன்னால் நான் தான் அனுபவத்தில் இருக்கிறேன்.

தாவா சொத்து கீழமட்டையான் கிராம குடியிருப்பில் இருந்து சுமார் 4 கிலோமீட்டர் தள்ளி உள்ளதா என்றால் 3 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. தாவா சொத்து கீழமட்டையான் கிராமத்தில் இருந்து அதிக தூரம் இருப்பதால் வாதிகளின் தகப்பனார் சிறிய அளவிலான வீடு கட்டுவதற்காக தரைமட்ட அளவிலான அடித்தளம் போடப்பட்டு குடிசை போட்டுள்ளார் என்று சொன்னால் அது தவறு, நான் தான் பேஸ்மட்டம் போட்டு சீட்டு வேயப்பட்டு அனுபவம் செய்து வருகிறேன். வாதிகளின் தகப்பனார் முத்தையா அவர்கள் கடந்த 24.11.1992ல் இறந்துவிட்டார் என்ற விபரம் உங்களுக்கு தெரியுமா என்றால் இறந்தது தெரியும். முத்தையா இறப்பிற்கு பிறகு வாதிகள் தான் தாவா சொத்தை அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் நான் தான் அனுபவம் செய்து வருகிறேன், ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன்.

தாவா சொத்துக்களை வாதிகள் அனுபவம் செய்து வந்ததை உங்களால் இடையூறு செய்யப்பட்டு, கடந்த 25.10.2020ம் தேதியில் அடியாட்களுடன் நீங்களும், இதர நபர்களும் வாதிக்கு இடையூறு செய்தீர்கள் என்றால் அது தவறு, என்னை தான் அடித்தார்கள், கால் உடைந்து மருத்துவ சிகிச்சை எடுத்ததற்கான ஆவணங்கள் உள்ளது. உங்களால் வாதிக்கு தாவா சொத்தில் இடையூறு செய்யப்பட்ட போது வாதிகளால் தடுக்கப்பட்டது, அப்போது நீங்கள் தாவா சொத்தை அனுபவம் செய்ய விடமாட்டேன் என்று தகராறு செய்தீர்கள் என்று சொன்னால் அவ்வாறு சொல்வது தவறு, நான் தான் அனுபவம் செய்தேன்.

1ம் வாதி அமாவாசை என்பவர் தாவா சொத்து சம்பந்தமாக 04.12.2020ம் தேதியில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் இல்லை. உங்களால் வாதி தரப்பில் கொடுக்கப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டு பதில் அறிவிப்பு கொடுக்கப்படவில்லை என்றால் அறிவிப்பு எனக்கு ஏதும் வரவில்லை. வழக்கறிஞர்

அறிவிப்பை பெற்றுக்கொண்டு உங்கள் தரப்பில் பதிலறிவிப்பு ஏதும் கொடுக்கப்படாத நிலையில், கடந்த 24.11.2020ல் தாவா சொத்தில் அத்து மீறி நுழைந்தது சம்பந்தமாக மேற்படி தேதியில் காடுபட்டி காவல் நிலையத்தில் வாதியால் புகார் கொடுக்கப்பட்டது என்றால் என்னால் சீட்டு போடப்பட்டு குடிசை வேயப்பட்டது தொடர்பாக வாதியால் தகராறு செய்யப்பட்டு, அதனால் நான் புகார் கொடுத்தேன். இருதரப்பிலும் புகார் கொடுக்கப்பட்டது, என்னை சீட் போட சொன்னார்கள். காவல் விசாரணையில் சிவில் பிரச்சனை என்பதால் நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ளுமாறு இருதரப்பிலும் அறிவுறுத்தினார்கள் என்றால் ஆம்.

தாவா சொத்தில் கடந்த 03.12.2020ம் தேதியில் வாதிகளை விவசாயம் செய்யவிடாமல் உங்களால் தடுக்கப்பட்டு, எந்த நீதிமன்றத்தில் வேண்டுமென்றாலும் வழக்கு தாக்கல் செய், நான் சும்மா விடமாட்டேன் என்று தகராறு செய்தீர்கள் என்றால் அவ்வாறு சொல்வது தவறு. உங்களது தகப்பனார் பெயர் என்ன என்றால் கருப்பணக்கோனார் ஆவார். உங்களது தந்தை உயிருடன் உள்ளாரா என்றால் இல்லை. உங்களது தந்தை எந்த தேதியில் எந்த வருடம் இறந்தார் என்றால் அது தெரியாது. உங்களது தகப்பனாரின் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை.

உங்களது தகப்பனார் பெயர் கருப்பணக்கோனார் இல்லை என்றும், அதனால் தான் அவருடைய இறப்பு மற்றும் வாரிசு சான்றுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அவ்வாறு சொல்வது தவறு, என்னுடைய தகப்பனார் பெயர் கருப்பணமூப்பன் தான். உங்களால் தாக்கல் செய்யப்பட்ட பிரமான வாக்குமூலத்தில் உங்களது தகப்பனார் பெயர் கருப்பன்மூப்பன் என்று கையால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். சாட்சியிடம் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை காட்டி அதில் தாவா சொத்தின் சர்வே எண்.717/5 தனி சர்வே எண்ணாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது கூட்டுப்பட்டா ஆகும் என்று சாட்சியம் அளித்தார். பி.வா.சா.ஆ.1ல் வாதிகளின் தகப்பனார் முத்தையா மூப்பன் பெயரில் பட்டா உள்ளது என்றால் சரிதான், ஆனால் கூட்டுப்பட்டா ஆகும். தாவா சொத்தின் சர்வே எண்.717/5 வாதிகளின் தகப்பனார் கடந்த 27.03.1972ல் கிரையம் பெற்றதின் அடிப்படையில் அவரது பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்று சொன்னால் அது தவறு, கூட்டுப்பட்டா ஆகும்.

பி.வா.சா.ஆ.2ல் பட்டா எண் குறித்து எதுவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். பி.வா.சா,ஆ,2 வழக்கிற்கு சம்பந்தப்பட்டது அல்ல என்று சொன்னால் அது சரியல்ல. பி.வா.சா.ஆ,4ல் வரி செலுத்தியதில் உங்களுடைய பெயர் இல்லை என்று சொன்னால் என்னுடைய தகப்பனார் பெயரில் வரி செலுத்தப்பட்டுள்ளது. பி.வா.சா.ஆ.3ல் தாவா சொத்தின் சர்வே எண் தொடர்பாக எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் அது சரியல்ல. பி.வா.சா.ஆ.5 ஆவணத்திற்கும் வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் அது சரியல்ல.

அசல் வழக்கு எண்.53/2014ல் உள்ள வழக்கு விபரங்களும் இந்த வழக்கு விபரங்களும் வெவ்வேறு காலங்களில் ஏற்பட்டது என்று சொன்னால் அது தவறு. ஒரே காலங்களில் ஏற்பட்டது. அசல் வழக்கு எண்.53/2014 உங்களால் வாதிகளுக்கு இடையூறு செய்யப்பட்டதால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் வாதிகள் தான் என்னை வந்து அடிக்க வந்தார்கள். உங்களால் கடந்த 2020ம் வருட கால கட்டத்தில் பலமுறை வாதிகளிடம் தகராறு செய்யப்பட்டதால் தான் இந்த தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அது தவறு. ஆகையினால் உங்களால் தாக்கல் செய்யப்பட்ட பி.வா.சா.ஆ.5 ஆவணத்திற்கும் வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் அது சரியல்ல.

பி.வா.சா.ஆ.6ல் மின் கட்டண அட்டையில் வாதிகளின் தகப்பனார் முத்தையா பெயர் எழுதப்பட்டுள்ளது, அடிக்கப்பட்டு உங்களுடைய பெயரான சங்கர் பெயர் எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான், ஆனால் நான் அடிக்கவில்லை. பி.வா.சா.ஆ.6ல் வாதிகளின் தகப்பனார் பெயர் முத்தையா என்பதை உங்களால் அடிக்கப்பட்டு, தயார் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் எனக்கு எழுதப்படிக்க தெரியாது நான் அடிக்கவில்லை. பி.வா.சா.ஆ.6 மற்றும் 7 வழக்கிற்காக உங்களது பெயரில் ஏற்படுத்தி கொண்டு தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் அது சரியல்ல.

தாவா சொத்தானது வாதிகளின் தகப்பனார் முத்தையா அவர்களால் கிரையம் பெறப்பட்டு, அனுபவ சுவாதீனத்தில் இருந்து வந்து, வாதிகளுக்கு பாத்தியப்பட்டுள்ளது என்று சொன்னால் அது தவறு. தாவா சொத்து வாதிகளுக்கு மட்டும் பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்து என்று சொன்னால் அது தவறு. தாவா சொத்து கூட்டுப்பட்டா அல்ல, நாளது தேதியில் வாதிகளுக்கு தனிப்பட்ட சொத்து என்று சொன்னால் அது தவறு. ஆகையினால் தாவாவில் வாதிகள் கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கது என்று சொன்னால் அது தவறு.

(ஒம்.) திரு. T. கோகுலகிருஷ்ணன், பி.ஏ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி